DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.158/2024**

Deposition of witness for Prosecution அ.சா.5

| | | |
|---|---|---|
| பெயர் | : | A.மாணிக்கம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ஆரோக்கியசாமி |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 20.05.2026

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து பணி ஒய்வு பெற்றுவிட்டேன். கடந்த 13.11.2022 ம் தேதி வேலாயுதப்பட்டிணம் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்தபோது 13.01.2022 ம் தேதி 16 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது நாச்சாங்குளம் தனசேகரன் மனைவி தனலெட்சுமி என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.1/2022, இதச பிரிவு 457,380, 285-ன் கீழ் வழக்கு பதிவு செய்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் நீதிமன்றத்திற்கும் அனுப்பி வைத்தேன். (**மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) பின்பு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு சம்பவ

சாட்சிகளிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தேடியபோது கண்டுபிடிக்க முடியவில்லை. பின்னர் பணி ஓய்வு பெற்றுவிட்டேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

புகார்தாரர் வீட்டின் கதவை உடைக்கப்பட்ட நேரத்தை தெளிவாக புகாரில் குறிப்பிட்டு கூறியுள்ளாரா என்றால் காலை 9.20 என்று குறிப்பிட்டுள்ளார். வீட்டில் எரிந்து போனதாக கூறிய பொருட்களின் மதிப்பை புகாரில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. எதிரியின் பெயரை புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.